செ.வெ.எண்.51 நாள்.21.12.2017.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் உலக எய்ட்ஸ் தினத்தினையொட்டி, எச்ஐவி பணியில் சிறப்பாக பணியாற்றிய மருத்துவர்கள், தொண்டு நிறுவனங்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், உலக எய்ட்ஸ் தினத்தினையொட்டி, பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி இன்று (21.12.2017) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் 2017ம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் எச்ஐவி பணியில் சிறப்பாக பணியாற்றி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உதவி முதல்வர் மரு.ரேவதி பாலன், ரத்த வங்கி தலைமை மருத்துவ அலுவலர் மரு.மணிமலா, தனியார் மருத்துவமனை மருத்துவர்கள் மரு.மதுபாலா, மரு.ஜி.ஜி.செல்வன், மரு.விஜயகோபாலன் ஆகியோருக்கும் எச்ஐவி பணியில் மாவட்ட எய்ட்ஸ் மையத்திற்கு உதவி செய்த தொண்டு நிறுவனங்களுக்கு எச்ஐவி பணியில் மாவட்ட எய்ட்ஸ் மையத்திற்கு உதவி செய்த தொண்டு நிறுவனங்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களையும், எச்ஐவியால் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகளில் அதிக மதிப்பெண் பெற்ற 10 வகுப்பில் தலா ரூ.1000/- வீதம் இரண்டு பேருக்கும், 12ம் வகுப்பில் தலா ரூ.2000/- வீதம் இரண்டு பேருக்கும் பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது-

எய்ட்ஸ் நோயாளிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிறந்த சேவையாற்றும் மருத்துவர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களை பாராட்டுகின்ற வகையிலும், உலக எய்ட்ஸ் தினம் டிசம்பர் 1ம் தேதி அனுசரிக்கப்பட்டு வருகிறது. அன்று ஒக்கி புயல் தாக்கமாக நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்பட்டது. சான்றிதழ்கள் இன்று வழங்கப்படுகிறது. எய்ட்ஸ் நோயாளிகள் முறையான சிகிச்சை எடுத்துக் கொண்டு, சராசரி மனிதர்களை போல வாழ முடியும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிறந்த சேவையாற்றும் தொண்டு நிறுவனங்களையும், மருத்துவர்களையும் வாழ்த்துகிறேன் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட எய்ட்ஸ் திட்ட மேலாளர் மரு.ஜான்ஜூடு ஜோஸ்வா, திட்ட மேற்பார்வையாளர் திரு.எம்.ஜெயக்குமார், மாவட்ட விரிவாக்க கல்வியாளர் திரு.அப்துல்காதர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.